## அசல் வழக்கு எண்.51/2017

## தேதி: 04.02.2025.

**பி.வா.சா.2: திருமதி. கீதா, க/பெ. சுப்பிரமணி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

தாவா சொத்து என் அம்மாவிற்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். வா.சா.ஆ.10 தான் அந்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் சரியான பதில் அறிவிப்பு கொடுக்க கால அவகாசம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு, நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் நான் பதில் அறிவிப்பு கொடுப்பதற்குள்ளேயே வாதி வழக்கை தாக்கல் செய்துவிட்டார்.

நானும் என் அக்கா தங்கை நால்வரும் தனித்தனியே பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 5 மற்றும் 6வது பிரதிவாதிகளின் பதிலுரையை வைத்து தான் இந்த வழக்கை நடத்துகிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் 5 மற்றும் 6வது பிரதிவாதியின் பதிலுரையை அடாப்ட் செய்து கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3-ல் குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே பாகமாகிவிட்டது, எந்த வருடம், யார் மூலமாக என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளோம், என் பெரியப்பா மூலமாக பாகமாகிவிட்டது என்று சொல்லியுள்ளோம். அவ்வாறு எதுவும் முதல் விசாரணையில் சொல்லாமல் தற்போது நீதிமன்றத்தில் முதல் முறையாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என்னுடைய பதிலுரையில் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே பாகமாகிவிட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. குப்புசாமி என் பெரியப்பா. குப்புசாமியிடம் என் அம்மாவும் அப்பாவும் கடன் வாங்கினார்கள் என்ற விவரத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான், முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், இன்னும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

என் அப்பாவும் அம்மாவும் என் பெரியப்பா குப்புசாமியிடம் கடன் வாங்கியதாக சொல்வது இந்த வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோமா என்றால் பெற்றுள்ளோம், அதை எங்கள் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். எங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 பாக பிரிவினை பத்திரத்தில் வாரிசு சான்றிதழை இணைத்துள்ளோமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை.

வாரிசு சான்றிதழில் எத்தனை நபர்கள் வாரிசுகள் என்று கொடுத்துள்ளார்கள் என்றால் நாங்கள் நால்வரும் வாரிசுகள் என்று கொடுத்துள்ளார்கள், என் அம்மா இறந்து 15 நாட்கள் கழித்து வாரிசு சான்றிதழ் பெற்றோம். என்னுடைய முதல் விசாாணை பத்தில 4-ல் தாவா ஷெட்யூல் சொத்தை 4 பாகமாக பிரித்து எங்கள் நால்வருக்கும் கொடுத்தார்கள் என்ற விவரத்தை பதிலுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நாங்கள் நால்வரும் 29.06.2018ல் முருகன், பச்சையப்பன் மற்றும் சுரேஷ் ஆகியோருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். அந்த

வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்து எங்கள் நால்வருக்கு தான் சொந்தம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதனால் தாவா சொத்தில் முருகனும் ஒரு வாரிசு என்பதால் 5ல் ஒரு பாகத்தை வாதி முருகனுக்கும் ஒரு பங்கை பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றால் மொத்தம் 6 நபர்கள், ஒரு அண்ணன் இறந்துவிட்டார், அவருடைய வாரிசுகளை சேர்க்கவில்லை.

மேற்சொன்ன விவரத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். பதிலுரையில் சொல்லாத விவரங்களை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியிருப்பது ஏற்கக் கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி முடிந்த பிறகு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு அந்த கூடுதல் பதிலுரையை ஏற்க வேண்டும் என்று நான் தாக்கல் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது சம்மந்தமாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு விசாரணைக்காக வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது, அதற்கான ஆதாரத்தை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னிடம் ஆதாரம் உள்ளது, அதை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் மேல்முறையீட்டு விசாரணைக்காக வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. 5 மற்றும் 6வது பிரதிவாதிகள் யார் என்றால் என் அக்கா உஷா மற்றும் கீதா ஆகியோரிடம் சொத்தை கிரையம் வாங்கியவர்கள். 5 மற்றும் 6வது பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு வருவதில்லை என்றால் சரிதான். வாதியின் பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் அக்கா தங்கை நால்வரும் சேர்ந்து பாக பிரிவினை பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் அவர் தான் எங்களை ஏமாற்றினார்.

தாவா சொத்தில் அம்மாவின் வாரிசு என்ற முறையில் வாதி முருகனுக்கும் பாகம் உண்டு என்றாலும், தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல, முருகனுக்கு பாகம் கிடையாது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.